DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 76/2024

PROSECUTION WITNESS No - PW-1

| | | | |
|---|---|---|---|
| Name : | சேதுராமன் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2025.

2ம் எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கீழச்சீவல்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.02.2023ம் தேதி உலகப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மாலை 05.00 மணியளவில் நானும் தலைமை காவலர் சரவணன் முதுநிலை காவலர் பிரபாகரன் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்ட போது ஆரணிபட்டிஇ மாந்தகுடிபட்டி கிராமம் அருகில் சென்ற போது TN50F3781 என்ற டிப்பர் லாரியை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை செய்த போது சுமார் 3 யூனிட் அளவுள்ள கிராவல் மண் இருந்தது. நாங்கள் வண்டியை நிறுத்தி விசாரித்த போது வண்டி ஓட்டுநர் பொன்னமராதியை சார்ந்த வினோத்குமார் என பெயரைச் சொல்லிவிட்டு வண்டியை நிறுத்தி ஓடிவிட்டார். அதன் பின் வண்டியை ஓட்டி வந்தவர் வினோத்குமார் என்றும் வண்டியின் உரிமையாளர் மாந்தகுடிபட்டியைச் சார்ந்த பாரதிராஜா என்று தெரிந்து கொண்டும் மேற்படி வண்டியுடன் காவல் நிலையம் சென்று நான் எழுத்து மூலமான புகார் ஒன்று கொடுத்தேன். மேற்படி நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. இங்கு என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள TN50F3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பளர் லாரி தான் நான் சம்பவ இடத்தில் கைப்பற்றி நிலையம் கொண்டு வந்த வாகனம் ஆகும். மேற்படி TN50F3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நாங்கள் ரோந்து பணி சென்றது அவரவர் இருசக்கர வாகனத்தில் என்றால் சரிதான். நான் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் வீடுகள் இல்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் மின்விளக்கு வசதிகள் உண்டா என்றால் இல்லை. இந்த வழக்கு தொடர்பாக தனி நபர் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. ஓட்டுநர் எங்களை பார்த்ததும் வண்டியை நிறுத்திய தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 5 அடி இருக்கும். சம்பவ நேரம் நல்ல இருட்டு நேரம் என்றால் சரிதான். எதிரிகளின் பெயரை சம்பவ இடத்தில் யாரும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் தன் பெயரை மட்டும் சொல்லிவிட்டு அங்கிருந்த ஓடிவிட்டார். நாங்கள் பிடிக்க முயற்சித்தோம் ஆனால் முடியவில்லை. அந்த இடத்தில் தனி நபர் யாரும் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு 9.00 மணிக்கு சென்றேன். அந்த நேரத்தில் காவல் ஆய்வாளர் நிலையத்தில் இருந்தாரா என்றால் இருந்தார். பார்வை மகஜர் எழுதியது யார் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். கைப்பற்றப்பட்ட லாரியை காவல் நிலையத்திற்கு யார் ஓட்டி வந்தார் என்றால் வண்டி ஓட்ட தெரிந்த காவலர் பிரபாகரன் என்பவர் ஓட்டி வந்தார். சம்பவ இடத்தில் வைத்து புகைப்படம் வீடியோ எடுத்தோமா

என்றால் இல்லை. வண்டியில் அள்ளப்பட்டிருந்த கிராவல் மண் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற விவரம் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக ஓட்டுநர் பெயர் சொன்னதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக தயாரிக்கப்பட்ட புகார் அடிப்படையில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் இது தொடர்பாக வருவாய் துறை, கனிம வள துறைக்கு அறிக்கை எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. சம்பவத்தன்று 2 வது எதிரி அணிந்திருந்த உடை விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.01.27 16:54:12 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 76/2024

PROSECUTION WITNESS No - PW-2

| | | | |
|---|---|---|---|
| Name : | சரவணன் | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of January 2025.

2ம் எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவருக்காக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது நெற்குப்பை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.02.2023ம் தேதி உலகப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது மாலை 05.00 மணியளவில் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சேதுராமன் என்பவரும் முதுநிலை காவலர் பிரபாகரன் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்ட போது ஆரணிபட்டி, மாந்தகுடிபட்டி கிராமம் அருகில் சென்ற போது TN50F3781 என்ற டிப்பர் லாரியை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி சோதனை செய்த போது சுமார் 3 யூனிட் அளவுள்ள கிராவல் மண் இருந்தது. நாங்கள் வண்டியை நிறுத்தி விசாரித்த போது வண்டி ஓட்டுநர் பொன்னமராதியை சார்ந்த வினோத்குமார் என பெயரைச் சொல்லிவிட்டு வண்டியை நிறுத்தி ஓடிவிட்டார். அதன் பின் வண்டியை ஓட்டி வந்தவர் வினோத்குமார் என்றும் வண்டியின் உரிமையாளர் மாந்தகுடிபட்டியைச் சார்ந்த பாரதிராஜா

என்று தெரிந்து கொண்டும் வண்டி ஓட்ட தெரிந்த காவலர் பிரபாகரன் என்பவர் உதவியுடன் காவல் நிலையத்திற்கு வந்து சேர்ந்தோம். மேற்படி எங்களால் கைப்பற்றப்பட்ட TN50F3781 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி உரிய கைப்பற்றுதல் மகஜரில் நானும் காவலர் பிரபாகர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். இங்கு காட்டப்படும் கைப்பற்றுதல் மஜரிலுள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையாது தான். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நாங்கள் ரோந்து பணி சென்றது அவரவர் இருசக்கர வாகனத்தில் என்றால் சரிதான். நான் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் வீடுகள் இல்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் மின்விளக்கு வசதிகள் உண்டா என்றால் இல்லை. இந்த வழக்கு தொடர்பாக தனி நபர் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. ஓட்டுநர் எங்களை பார்த்ததும் வண்டியை நிறுத்திய தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 5 அடி இருக்கும். சம்பவ நேரம் நல்ல இருட்டு நேரம் என்றால் சரிதான். எதிரிகளின் பெயரை சம்பவ இடத்தில் யாரும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் தன் பெயரை மட்டும் சொல்லிவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார். எந்த திசையில் ஓடினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நாங்கள் பிடிக்க முயற்சித்தோம் ஆனால் முடியவில்லை. அந்த இடத்தில் தனி நபர் யாரும் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு 9.00 மணிக்கு சென்றோம். அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்த இடத்திலோ வேறு எந்த இடத்திலோ தேதிகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ 2 கைப்பற்றுதல் மகஜர் எங்கு

வைத்து எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தற்சமயம் எனக்கு ஞாபகமில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதால் வழக்கிற்கு தோதாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.01.27 16:54:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை